[19th September 1961

(*b*) of so, the details thereof?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) No, Sir.

(*b*) Does not arise.

SRI M. KALYANASUNDARAM: மூன்ருவது திட்டத்தில் ஒரு கால்நடைக் கல்லூரி திறக்கப்படவேண்டும் என்பதற்காக நிதி ஒதுக்கப் பட்டிருக்கிறது. இறுதியான முடிவு எடுக்கப்படாவிட்டாலும், அந்தக் கல் லூரியை எந்த ஜில்லாவில் நிறுவுவதாக உத்தேசம்?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: ஒரு விவசாயக் கல் லூரி, ஒரு கால்நடைக் கல்லூரி இரண்டும் அமைப்பது என்று உத்தேசம். ஒவ்வொன்றையும் ஒவ்வொரு மாவட்டத்தில் வைக்கலாம் என்று உத் தேசம். அதை எங்கெங்கே வைப்பது என்பதை இனி தான் முடிவு செய்யவேண்டும். இப்பொழுது அது பரிசீலனையில் இருக்கிறது.

Co-operative Dairy Farms

* 1632-N *Q.*—SRIMATHI A. S. PONNAMMAL (on behalf of SRI N. R. THIAGARAJAN): கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நமது ராஜ்யத்தில் எத்தனை கூட்டுறவு பால் பண்ணைகள் இருக் கின்றன?

(இ) எங்கெங்கு?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (அ) There are no Co-operative Dairy Farms functioning in this State at present.

(இ) Does not arise.

Milk Colony

* 1632-O. *Q.*—SRI V. SUBBIAH: கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

பம்பாயிலுள்ள "ஆரே" பால் பண்ணை போன்று நவீன வசதி களுடன் சென்னையில் ஒரு பால் பண்ணை அமைப்பதற்கு உத்தேசமுண்டா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: The Government have already started a milk colony at Madhavaram which will contain modern facilities.

Wild Elephant Menace

* 1632-P. *Q.*—SRI V. K. KOTHANDARAMAN: கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

நமது ராஜ்யத்தில் யானைகளால் பாதிக்கப்பட்ட நிலம் எவ்வளவு, ஜில்லாவாரியாக?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: A statement[a] is placed on the table of the House.

DEPUTY SPEAKER: Questions are over.

---

a Printed as Appendix IX on page 234 infra.